# தூத்துக்குடி மாநகராட்சி
## கூட்டப்பொருள்

2020ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 18 ம் நாள் காலை 11.00 மணியளவில் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அறையில் வைத்து நடைபெற்ற மாமன்ற கூட்ட நடவடிக்கைகள்.

## பொருள்

| | | |
|---|---|---|
| 18.08.2020. | 1) இம்மாநகராட்சி தெற்கு மண்டலம் வார்டு எண். 48 மீளவிட்டான் கிராமம் சர்வே எண். 782/1 மனைப்பிரிவு பரப்பளவு 7.70 ஏக்கர் (31178.50 ச.மீ) குடியிருப்பு மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்கள் கடித எண். 20388/2019/7CP6 29.11.2019 தேதிய கடிதத்தில் சாலை அமைப்பு வரைபடத்திற்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட மனைப்பிரிவு உரிமையாளர் திரு S. இம்மானுவேல் என்பவர் திரு. T. பங்குராஜ் என்பவர் ஜெனரல் பவர் ஏஜென்டாக பத்திரபதிவு எண். 1074/2019/ 21.03.2019 தேதியில் பத்திர பதிவு செய்து உரிமை வழங்கியுள்ளார். சாலை அமைப்பு வரைபடத்தின் படி தார் சாலைகள் அமைக்கப்பட்டும் மழைநீர் வடிகால் வசதி சிறு பாலங்கள் (கல்வெட்டு) அமைக்கப்பட்டும் குடிநீர் விநியோக பகிர்மான குழாய் அமைக்கப்பட்டும் மற்றும் தெருவிளக்கு அமைப்பதற்கு ரூ. 6.90 லட்சம் மனுதாரர் திரு. S. இம்மானுவேல் என்பவர் மாநகராட்சியில் செலுத்தியுள்ளார். மனைப்பிரிவு உரிமையாணை கட்டணம் ரூ. 1,34,100/—ஐ 09.06.2020 தேதியில் மாநகராட்சியில் செலுத்தியுள்ளார். மேற்கண்ட மனைப்பிரிவுள்ள சாலைகள் மழைநீர் வடிகால் சிறுபாலங்கள், குடிநீர் விநியோக குழாய்கள் மூலை முடுக்குகள் மற்றும் பூங்கா இடம் மாநகராட்சியின் பராமரிப்பிற்கு எடுத்து கொள்வதற்கு பதிவு செய்யப்பட்டு தான பத்திரங்கள் மூலம் ஒப்படைப்பு செய்வதற்கு மனுதாரர் திரு S. இம்மானுவேல் என்பவரின் ஜெனரல் பவர் ஏஜென்ட் திரு. T. பங்குராஜ் 12.05.2020 தேதிய மனுவில் அனுமதி கோரியுள்ளார். எனவே மேற்கண்ட குடியிருப்பு மனைப்பிரிவில் உள்ள சாலைகள், மூலை முடுக்குகள், மற்றும் பூங்கா இடங்கள் தான பத்திரம் மூலம் மாநகராட்சி ஆணையர் பெயரில் தான பத்திரம் பதிவு செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>எப்1/03197/2019/தெ.ம. | 125) அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| | 2) தூத்துக்குடி மாநகராட்சிப் பகுதிகளில் கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு பணிகள் சிறப்பான முறையில் நடைபெற்று வருகிறது. மேலும் மாநகராட்சி பகுதியில் தெருக்கள் மற்றும் மக்கள் அதிகம் கூடும் இடங்களில் காய்ச்சல் கண்டறிதல் மற்றும் மாதிரி எடுக்கும் பணிகள், ஐந்து நடமாடும் குழுக்கள் மூலம் எடுக்கப்பட்டு வருகிறது. மேற்படி கொரானா தொற்று தடுப்பு பணிகளுக்கு தேவையான மருத்துவர்கள், செவிலியர்கள, ஆய்வக நுட்புணர்கள், ஆய்வக உதவியாளர்கள், கணினி பதிவாளர்கள் மற்றும் வாகன உதவியாளர்கள் ஆகியோரை இரண்டு மாதம் தற்காலிகமாக பணியமர்த்திக்கொள்ள அனுமதியும் மற்றும் மேற்படி மருத்துவ | 126) அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

அலுவலர்களுக்கு மாதம் ரூ. 60000/— வீதமும் செவிலியர்களுக்கு மாதம் ரூ. 14000/— வீதமும், ஆய்வக நுட்புனர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 500/— + ரூ. 50/— தினப்படியும் ஆய்வக உதவியாளர்கள், கணினி பதிவாளர்கள், வாகன உதவியாளர்கள் ஆகியோருக்கு நாள் ஒன்றிற்கு ரூ. 500/— வீதமும் மற்றும் துப்புரவு பணியாளர்களுக்கு நாள் ஒன்றிற்கு ரூ. 354/— வீதம் வழங்கவும் மேற்படி பணியாளர்களுக்கு ஆகும் செலவீனத்தை பேரிடர் மேலாண்மை நிதியிலிருந்து (State Disaster Response Fund) வழங்கவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** மாமன்றம் அனுமதிக்கலாம். எச்1/986/2020

3) தூத்துக்குடி மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சுற்றித் திரியும் கால்நடைகளால் பொதுமக்களுக்கும் போக்குவரத்திற்கும் அச்சுறுத்தல் ஏற்படுவதாக வந்த புகார் மனுவின் பேரில், ஆணையர் அவர்களின் உத்தரவின்படி மாடு பிடிக்கும் பணியாளர்களைக் கொண்டு மாநகராட்சி பகுதிகளில் மாடுகள் பிடிக்கப்பட்டு வருகிறது. மாநகராட்சி எல்லைக்குள் சுற்றித் திரிந்த மாடுகள் பிடிக்க தலா ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு கூலியாக ரூ. 600/— வீதம் 15 நபர்களைக் கொண்டு பிடிக்கப்பட்டு திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள அரசு அங்கீகாரம் பெற்ற தொண்டு நிறுவனமான ராஜேஸ்வரி கோசலா டிரஸ்ட் வடக்கு காவலர் குறிச்சியில் ஒப்படைக்கப்பட்டது மொத்த செலவீனம் கீழ்க்கண்டவாறு.

| மாடுபிடிக்கும் பணியாளர்கள் பணிபுரிந்த தேதி | மாடுபிடித்த பணியாளர்கள் எண்ணிக்கை | கணக்கீடு ரூ. | மொத்தம் ரூ. |
|---|---|---|---|
| 09.11.2019 | 15 | 9000(15x600) | 13000/— |
| | மாட்டுத் தீவனச் செலவு | 2000 | |
| | மாடு பிடிக்க கயிறு | 2000 | |
| 16.11.2019 | 15 | 9000 (15x 600) | 24000/— |
| | மாட்டு தீவனச் செலவு | 2000 | |
| | மாடு பிடிக்க கயிறு | 2000 | |
| | வாகனம் | 11000 | |
| | மொத்தம் | | 37000/— |

127) அலுவலகக் குறிப்பு 1 அனுமதிக்கப்பட்டது அலுவலகக் குறிப்பு 2 அங்கீகரிக்கப்பட்டது.

மேற்படி மாடு பிடிக்கும் பணியாளர்களுக்கு கூலி, மாடு தீவனச் செலவு, மாடு பிடிக்க கயிறு செலவு மற்றும் மாடுகளை கொண்டு செல்ல வாகனச் செலவு தொகை மொத்தம் ரூ. 37000/—ஐ இம்மாநகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கிட மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1) மாமன்றம் அனுமதிக்கலாம்
2) மேற்படி செலவுத் தொகை ரூ 37000/— ஐ ஆணையர் அவர்களின் முன் அனுமதி பெற்று வழங்கியதையும் மாமன்றம் அங்கீகரிக்கலாம்.

எச்2/15232/2012

| | | |
|---|---|---|
| | **4)**தூத்துக்குடி மாநகராட்சிப் பகுதிகளில் கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு பணிகள் மாநகராட்சி பணியாளர்கள் மற்றும் அலுவலர்களைக் கொண்டு தீவிரமாக நடைபெற்று வருகிறது. மேற்படி பணிகளில் பணிபுரியும் மைய அலுவலகம் மற்றும் நான்கு மண்டலங்களிலும் பணிபுரியும் நிரந்தர தற்காலிக பணியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு பொதுமக்கள் மற்றும் காவல்துறையினர் மத்தியில் மாநகராட்சி பணியாளர்கள் என எளிதில் அடையாளம் தெரிவிக்கும் வகையில் தரம் வாரியாக மேலங்கிகள் அவசர அவசியம் கருதி கொள்முதல் செய்வதற்கு அனுமதி வழங்கவும் மற்றும் அதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ. **20.00** இலட்சத்தினை பேரிடர் மேலாண்மை நிதியிலிருந்து (State Disaster Response Fund) மேற்கொள்ளவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மாமன்றம் அனுமதிக்கலாம். எச்1/986/2020 | **128)** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| | **5)** தூத்துக்குடி மாநகராட்சி வடக்கு மண்டலம் அலுவலகத்திற்குட்பட்ட பகுதிகளில் நிலையில் இல்லாத கட்டிடங்களின் சொத்து வரிவிதிப்பு கேட்புகளின் உண்மை தன்மை அறிந்திடும் பொருட்டு வருவாய் உதவியாளர், வருவாய் ஆய்வாளர் (சி) உதவி வருவாய் அலுவலர் (பொ) மண்டலம் உதவி ஆணையர் (பொ) மற்றும் உதவி ஆணையர் ஆகியோர் அடங்கிய குழு ஏற்படுத்தப்பட்டு மேற்படி குழுவின் ஸ்தல ஆய்வு அறிக்கையின் படியும் கீழ்க்கண்ட பல்வேறு கோப்புகளின் அடிப்படையிலும், இரட்டை பதிவுகள் / தவறுதலாக/ நிலையில் இல்லாத கட்டிடம் சொத்து வரிவிதிப்புகள் ஆணையர் (ம) தனி அலுவலர் அவர்களின் உத்தரவு பெற்று கணினி பதிவில் ரத்து செய்யப்பட்டுள்ளது. | **129)** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

| வார்டு எண் | கோப்பு எண் | கேட்புத்தொகை | SUS | மொத்தம் | உத்தரவு நாள் |
|---|---|---|---|---|---|
| 1 | அ2/0388/2019 | 38033 | 8910 | 46943 | 31.01.2019 |
| | அ2/0519/2020 | 610 | 330 | 940 | 10.02.2020 |
| | அ2/1497/2020 | 990 | 360 | 1350 | 23.03.2020 |
| | **மொத்தம்** | **39633** | **9600** | **49233** | |
| 2 | அ2/0388/2019 | 39449 | 8250 | 47699 | 31.01.2019 |
| | அ2/0388/2019 | 793098 | 98400 | 891498 | 31.01.2019 |
| | அ2/0301/2020 | 1210 | 330 | 1540 | 30.01.2020 |
| | அ2/0415/2020 | 2728 | 330 | 3058 | 05.02.2020 |
| | அ2/0604/2020 | 1380 | 450 | 1830 | 13.02.2020 |
| | அ2/1154/2020 | 2860 | 450 | 3310 | 05.03.2020 |
| | அ2/1504/2020 | 6600 | 600 | 7200 | 24.03.2020 |
| | **மொத்தம்** | **807876** | **100560** | **906436** | |
| 3 | அ2/0388/2019 | 59794 | 10890 | 70684 | 31.01.2019 |
| | அ2/0518/2020 | 484 | 330 | 814 | 10.02.2020 |
| | அ2/0605/2020 | 3563 | 420 | 3983 | 13.02.2020 |
| | அ2/0652/2020 | 2904 | 450 | 3354 | 14.02.2020 |
| | மொத்தம் | **66745** | **12090** | **78835** | |
| | **பெருமொத்தம்** | **953703** | **130500** | **1084203** | |
| | | | | | |

| | | |
|---|---|---|
| | மேற்கண்டவாறு கணினியில் ரத்து செய்யப்பட்ட வரிவிதிப்புகளில் அரையாண்டிற்கு முன்னர் பல்வேறு காலங்களுக்கான கேட்புகள் மொத்தம் ரூ. 10,84,203/– நிலுவை கேட்புத் தொகையினை வசூல் செய்திட மார்க்கமில்லாததால், மேற்படி தொகையானது கணினி பதிவில் தொடர்ந்து நிலுவை கேட்பாக நீடிக்கும் நிலையில் வரி வசூலில் போதிய முன்னேற்றம் காட்டப்படாத தவறான கேட்பாக உருவாக வாய்ப்புள்ளது.<br>எனவே மேற்படி வரிவிதிப்புகளுக்கான நிலுவை கேட்புத் தொகையினை கணினி பதிவிலிருந்து முழுமையாக நீக்கம் செய்திடும் பொருட்டு (Write Off) மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு**<br>சொத்து வரிவிதிப்புகள் இரட்டை பதிவுகள் / தவறுதலாக/ நிலையில் இல்லாத கட்டடம் சொத்து வரிவிதிப்புகளின் நிலுவை கேட்புத் தொகைகளை வசூல் செய்திட மார்க்கமில்லாததாலும் மாநகராட்சி அலுவலர்கள் அடங்கிய குழுவின் அறிக்கையின் அடிப்படையிலும் பட்டியலில் கண்டுள்ள வரிவிதிப்புகளுக்கான நிலுவைகேட்புத் தொகையினை கணினி பதிவிலிருந்து முழுமையாக நீக்கம் செய்திட மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்,அ2/0388/2019 | |
| | 6) இம்மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட சங்கரப்பேரி கிராமம் சர்வே எண். 189/A2/ல் 5341.85 சதுர மீட்டர் (1 ஏக்கர் 32 சென்ட்) பரப்பளவு கொண்ட மனையில் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு உள்ளூர் திட்டக்குழுமம் கோப்பு எண் ந.க. 96/2020/தூஉதிகு நாள் 02.03.2020ன் படி தூத்துக்குடி உள்ளூர் திட்ட குழுமத்தில் அங்கீகரிக்கப்பட்ட சாலை அமைப்பு வரைபடத்தின்படி 1வது சாலை கிழமேல் 9 மீட்டர் அகலம் கொண்ட 14.97 சென்ட் மனை 2வது சாலை கிழமேல் 12 மீட்டர் அகலம் கொண்ட 20.343 சென்ட் 3வது சாலை தென்வடல் 10 மீட்டர் அகலம் உள்ள சாலை மற்றும் கிழ மேல் ஆகிய இரு பக்கமுள்ள தலா 1.125சதுர மீட்டர் அளவுள்ள மூலை முடுக்குகள் சேர்த்து 4.515 சென்ட் மனையில் தார் சாலை மனையில் மழைநீர் வடிகால் வசதி, சிறுபாலம் குடிநீர் பகிர்மான குழாய் மற்றும் LED விளக்குகள் கூடிய 7 மின்கம்பங்கள் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் உள்ளாட்சி பொது உபயோக பயன்பாட்டிற்கு 0.480செண்ட் காலி மனை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனைப்பிரிவில் உள்ள சாலைகள், மழைநீர் வடிகால், மூலை முடுக்குகள் மற்றும் உள்ளாட்சி பொது உபயோக பயன்பாட்டிற்குரிய மனை தெரு விளக்குகளை மாநகராட்சியில் ஒப்படைப்பு செய்வதற்கான தான பத்திரம் பதிவு செய்ய மனுதாரராகிய திரு. வி. வேதநாயகம் வேதமாணிக்கம் அனுமதி கோரியுள்ளார். எனவே மேற்படி உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவில் உள்ள தார் சாலை மழைநீர் வடிகால் வசதி சிறுபாலம் குடிநீர் பகிர்மான குழாய் மற்றும் LED விளக்குகள் கூடிய 7 மின்கம்பங்கள் ஆகியவைகள் உள்ள சாலைக்கான மனை மற்றும் உள்ளாட்சி பொது உபயோக பயன்பாட்டிற்கு 0.480 செண்ட் மனை அடங்கிய 40.308 செண்ட் காலிமனையை மாநகராட்சி ஆணையர் பெயரில் தான பத்திரம் பதிவு செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | 130)அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | **அலுவலகக் குறிப்பு :** மாமன்றம் அனுமதிக்கலாம். எப்1/773/2020/வ.ம. | |
| | 7) இம்மாநகராட்சி கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட சாலைகளில் பாதாளச்சாக்கடை மனித கழிவு குழாய்கள் மூடி குழிகள் தற்போதுள்ள சாலையின் மட்டத்தில் உயர்த்தி அமைக்கும் பணிக்கு திரு.கே. சுரேஷ்குமார், ஒப்பந்ததாரர் என்பவருக்கு இவ்வலுவலக கடிதம் ந.க.எண். இ2/01984/2018 நாள் 24.08.2018ன் படி வேலை உத்திரவு வழங்கப்பட்டது. மேற்படி பணியில் ஒப்பந்த காலம் 2 மாதம் மட்டுமே. வேலை உத்திரவு பெற்று ஒரு வருட காலத்திற்கும் மேலான நிலையில் இது வரை 10 பணிகள் மட்டுமே நடைபெற்றுள்ளன. மேற்படி பணியின் ஒப்பந்த காலம் இரண்டு மாதம் முடிந்து ஒரு வருடம் ஆகிவிட்ட நிலையில் பணி மேற்கொள்ள நடவடிக்கை ஏதும் மேற்கொள்ளாததால் அன்னாருக்கு 01.11.2019 முதல் தினசரி ரூ. 1000/– அபராதம் விதித்து முதல் அறிவிப்பு 20.11.2019ல் அனுப்பி வைக்கப்பட்டது. மேற்படி அறிவிப்பு அனுப்பப்பட்டு ஆறு மாதங்கள் முடிவடைந்த நிலையிலும் ஒப்பந்ததாரர் பணியினை மேற்கொள்ள எவ்வித நடவடிக்கை மேற்கொள்ளாத காரணத்தினாலும், பொதுமக்கள் மத்தியில் மாநகராட்சி பணிகள் மீது அவ நம்பிக்கை ஏற்பட காரணமாக இருப்பதாலும், மேற்படி பணியின் ஒப்பந்தத்தை ரத்து செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவித்து ஒப்பந்ததாரருக்கு இறுதி அறிவிப்பு 19.06.2020ல் அனுப்பி வைக்கப்பட்டது.<br>இந்நிலையில், மேற்படி பணியின் ஒப்பந்ததாரர், தனக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் பணியினை மேற்கொள்ள இயலவில்லை எனவும், மதிப்பீட்டில் உள்ள இரும்பு மூடிக்கு பதிலாக காங்கிரீட் மூடி போடவும், மூன்று மாத கால அவகாசமும் வழங்க கோரி தனது 26.06.2020ம் தேதிய கடிதத்தின் மூலம் கேட்டுக்கொண்டுள்ளார்.<br>மேற்படி பணியின் ஒப்பந்த காலம் முடிந்து ஒன்றரை ஆண்டுக்கு மேலானநிலையிலும், இறுதி அறிவிப்பு வழங்கப்பட்டு சுமார் 40 நாட்களுக்கு மேல் ஆகியும் பணியினை முடிக்க எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளாத நிலையில் மேற்படி பணியின் ஒப்பந்ததாராரின் விளக்கம் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை. எனவே ஒப்பந்த விதிகளின்படி மேற்படி பணியின் ஒப்பந்தத்தை ரத்து செய்து முன்வைப்புத் தொகையினை பறிமுதல் செய்வதுடன் ஏற்கனவே நடைபெற்ற 10 சதவீத பணிக்கான தொகையும் பறிமுதல் செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு**<br>1) மேற்படி பணிக்கான ஒப்பந்ததாராரின் ஒப்பந்தத்தை ரத்து செய்யலாம்.<br>2) மேற்படி பணிக்கான முன்வைப்புத்தொகை மற்றும் ஏற்கனவே நடைபெற்ற 10 சதவீத பணிக்கான தொகை ஆகியவற்றையும் பறிமுதல் செய்யலாம்.<br>3) மேற்படி பணியின் அவசரம் கருதி மறு ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். இ2/01984/2018 | 131) அலுவலகக் குறிப்பு 1 ,2 மற்றும் 3 அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | 8) இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படும் – ஸ்மார்ட் சிட்டி பணியில் தூத்துக்குடி மாநகராட்சி Proposed Centralised SCADA System Demand Driven – Water Supply & Distribution Management System for the Thoothukudi City Municipal Corporation Water Supply Improvement Scheme பணிக்காக ரூ. 9,01,00,000/– மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டுள்ள பணிக்கு 18.06.2020 அன்று வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப உறை 19.06.2020 அன்று திறக்கப்பட்டது.<br>1) M/S Endress +Hauser (India) Private Limited Chennai – ஒப்பந்ததாரர்<br>2) M/s. Yokpgawa India Limited Bangalore - ஒப்பந்ததாரர்<br>மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப தகுதிகள் கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப தகுதிக்கு தேவையான ஆவணங்களை சமர்ப்பித்துள்ளதன் அடிப்படையில் தீர்மான எண். 299 நாள் 03.08.2020ல் தொழில்நுட்ப கமிட்டியால் கீழ்காணும் இரண்டு ஒப்பந்ததாரர்கள் தொழில்நுட்ப தகுதி பெற்றுள்ளதாக விலைப்புள்ளி உறை திறக்க தேர்வு செய்யப்பட்டது.<br>1)M/S Endress +Hauser (India) Private Limited Chennai – ஒப்பந்ததாரர்<br>2) M/s. Yokogawa India Limited Bangalore - ஒப்பந்ததாரர்<br>மேற்படி தொழில்நுட்ப தகுதி பெற்ற இரண்டு ஒப்பந்ததாரர்களின் விலைப்புள்ளி உறைகள் உரிய அறிவிப்புகள் அனுப்பி வைக்கப்பட்டு 07.08.2020ஆம் தேதியன்று உறை திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில் கீழ்க்கண்டுள்ளவாறு விலைவிகிதம் அளித்திருந்தனர்.<br>1) M/S Endress +Hauser (India) Private Limited Chennai – ஒப்பந்ததாரர்<br>மதிப்பீட்டை விட 8.15 சதவிகிதம் குறைவு ( ரூ.7,38,44,933.43)<br>2) M/s. Yokpgawa India Limited Bangalore - ஒப்பந்ததாரர்<br>மதிப்பீட்டை விட 16.92 சதவிகிதம் அதிகம் ( ரூ.9,40,000.00)<br>M/S Endress +Hauser (India) Private Limited Chennai – ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட 8.15 சதவிகிதம் (ரூ. 7,38,44,933.43 சரக்கு மற்றும் சேவை வரி இல்லாமல்) குறைவாக கொடுத்துள்ளார். எனவே M/S Endress +Hauser (India) Private Limited Chennai – ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஸ்மார்ட் சிட்டி திட்ட பணியின் அவசரஅவசியம் கருதி அங்கீகரிக்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு**<br>மதிப்பீட்டை விட 8.15 சதவிகிதம் குறைவாக கொடுத்த M/S Endress +Hauser (India) Private Limited Chennai – ஒப்பந்ததாரருக்கு வேலை உத்திரவு வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>இ1/3209.2015 (SC ADA) | 132) அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | 9) தூத்துக்குடி மாநகராட்சியானது சங்கரப்பேரி, மீளவிட்டான், தூத்துக்குடி ரூரல், முத்தையாபுரம், அத்திமரப்பட்டி ஆகிய 5 கிராம பஞ்சாயத்துக்களை இணைத்து 05.08.2008 முதல் மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு 25.10.2011 முதல் 60 வார்டு பகுதிகளை உள்ளடக்கி மாநகராட்சியாக செயல்பட்டு வருகிறது. மாநகராட்சியின் மொத்தப் பரப்பளவு 90.66 சதுர கி.மீ. ஆகும்.<br>இம்மாநகராட்சி பகுதியுடன் இணைக்கப்பட்டுள்ள 5 கிராம பஞ்சாயத்து பகுதிகளில் மழைகாலங்களில் ஏற்படும் வெள்ளம் மற்றும் சாலைகளில் தேங்கும் மழைநீர் மற்றும் கழிவுநீர் செல்வதற்கு சீரான வாறுகால் வசதி இல்லாததால் பின்வரும் பட்டியலில் கண்டுள்ள பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் பம்ப் அறை கட்டிடம் பணி மேற்கொள்ள ரூ. 111.715 கோடி மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது. | 133) அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| வ.எண் | பணிகளின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. கோடி) |
| 1 | செயின்ட் ஆண்டன் பள்ளி ரோடு பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் பம்ப் கட்டும் பணி, ஆதிபராசக்தி நகர் முதல் எஸ்.ஆர்.ஆர்.ஏ மருத்துவமனை, ரஹ்மத் நகர் மெயின் ரோடு தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் பணிமனை ரோடு, ரஹ்மத்நகர் 2வது தெரு, ரஹ்மத்நகர் குறுக்கு தெரு அய்யாச்சாமி காலனி மெயின் ரோடு, முத்தம்மாள் காலனி 1வது தெரு, முத்தம்மாள் காலனி 3வது தெரு, முத்தம்மாள் காலனி 3வது தெரு மெயின் ரோடு முத்தம்மாள் காலனி இணைப்பு சாலை மற்றும் எட்டயபுரம் ரோடு வரை உள்ள பகுதியில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | 7.75 |
| 2 | ரேஷன் கடை பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் பம்ப் அறை கட்டும் பணி மற்றும் அய்யர்விளை NS ரோடு அய்யர்விளை 1வது குறுக்குத்தெரு அய்யர்விளை 2வது மற்றும் 3வது குறுக்கு தெரு பகுதிகளில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி. | 7.65 |
| 3 | அய்யாச்சாமி காலனி மெயின் ரோடு பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் பம்ப் அறை கட்டும் பணி மற்றும் அய்யாச்சாமி காலனி 1வது தெரு, 1வது குறுக்கு தெரு 2வது குறுக்கு தெரு, முத்தம்மாள் காலனி மெயின் ரோடு தனசேகரன் நகர் முதல் முத்தம்மாள் காலனி இணைப்பு சாலை வரை தனசேகரன் நகர் குறுக்கு தெரு முதல் கூட்டுறவு வங்கி குறிஞ்சிநகர் இணைப்பு சாலை தனசேகரன் நகர் கழிவறை சாலை தனசேகரன் நகர் பூங்கா ரோடு ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி. | 8.10 |
| 4 | குறிஞ்சிநகர் 1வது தெரு பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் பம்ப் அறை கட்டும் பணி மீளவிட்டான் இணைப்புச்சாலை, இந்திரா நகர், குறிஞ்சிநகர் குறுக்குதெரு பாரதிநகர், சின்னக்கண்ணுபுரம், அய்யப்பன் நகர், தேவர்காலனி, நேதாஜிநகர் மற்றும் வி.எம்.எஸ். நகர் பகுதிகளில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி. | 5.31 |
| 5 | சக்திவிநாயகர்புரம் 1வது தெரு பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் பம்ப் அறை கட்டும் பணி மற்றும் சக்திவிநாயகர்புரம் 1வது, 4வது, 5வது இணைப்பு சாலை முதல் கந்தசாமிபரம் ஸ்டேட் பாங்க் காலனி இணைப்பு சாலை, மற்றும் கந்தசாமிபுரம் மெயின் ரோடு, எஸ்.கே. எஸ்.ஆர் காலனி பகுதிகளில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி. | 5.31 |

| | | |
|---|---|---|
| 6 | லூர்தம்மாள்புரம் 1வது தெரு பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் பம்ப் அறை கட்டும் பணி மற்றும் லூர்தம்மாள்புரம் 7வது தெரு, மரைக்காயர் மண்டபம் ரோடு, அம்மன் கோவில் தெரு, ரோசம்மாள் பள்ளி எதிர்புறம் லூர்தம்மாள்புரம் பள்ளி மெயின் ரோடு மேற்கு பக்கம் ராஜுவ்காந்தி நகர், முஸ்லீம் தெரு கலைஞர்நகர், லூர்தம்மாள்புரம் மெயின் ரோடு பகுதிகளில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி. | 6.60 |
| 7 | பர்மா காலனி பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் பம்ப் அறை கட்டும் பணி மற்றும் பால்பாண்டி நகர் 5வது தெரு, 3வது தெரு குறுக்கு தெரு, மெயின் ரோடு பால்பாண்டி நகர் பூங்கா ரோடு பிஎம்சி. பள்ளி சாலை மற்றும் வீட்டு வசதிவாரியம் குடியிருப்பு (நீச்சல் குளம்) ரோடு பகுதிகளில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி. | 5.60 |
| 8 | அன்னை தெரசா நகர் பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் பம்ப் அறை கட்டும் பணி மற்றும் பால்பாண்டிநகர் 2வது 3வது 4வது தெரு மேற்கு முதல் கிழக்கு பக்கம் வரை மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | 4.60 |
| 9 | போல்பேட்டை 60அடி மெயின் ரோடு முதல் செல்வநாயகபுரம் ரோடு வரை உள்ள பகுதியில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | 2.01 |
| 10 | பொன்சுப்பையா நகர் மெயின் ரோடு பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் பம்ப் அறை கட்டும் பணி மற்றும் பொன் சுப்பையாநகர் கிழக்கு முதல் மேற்கு 1வது 2வது தெரு வடக்கு முதல் தெரு தெற்கு 1வது 2வது தெரு பகுதிகளில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | 0.56 |
| 11 | ராஜகோபாலநகர் மெயின் ரோடு பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் பம்ப் அறை கட்டும் பணி மற்றும் ராஜகோபால்நகர் 5வது குறுக்கு தெரு முதல் 10வது தெரு இணைப்பு சாலை வரை, ராஜகோபாலநகர் இணைப்பு சாலை முதல் மகிழ்ச்சிபுரம் வரை, மகிழ்ச்சிபுரம் மெயின் ரோடு, மகிழ்ச்சிபுரம் மெயின் ரோடு முதல் இரயில்வே டிராக் (Disposal Point) வெளியேற்றும் பகுதி மகிழ்ச்சிபுரம் கிழக்கு முதல் மேற்கு வரை உள்ள பகுதிகளில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி. | 4.10 |
| 12 | வடக்கு சங்கரப்பேரி முதல் சங்கரப்பேரி களம் வரை மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | 0.395 |
| 13 | செயின்ட்மேரீஸ் காலனி 1வது குறுக்கு தெரு பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் பம்ப் அறை கட்டும் பணி மற்றும் செயின்ட்மேரீஸ் காலனி 2வது குறுக்கு தெரு வடக்கு முதல் தெற்கு, மற்றும் கிழக்கு முதல் மேற்கு வரை உள்ள பகுதிகளில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | 1.85 |
| 14 | அண்ணாநகர் 1வது தெரு முதல் 11வது தெரு வரை உள்ள பகுதியில் மழைநீரா வடிகால் கட்டும் பணி பக்கிள் ஓடை வழியாக வெளியேற்றுதல் (Disposal Point) | 12.20 |
| 15 | அண்ணாநகர் 7, 8, 9, 10, 12வது தெரு கே.வி.கே. நகர் மேற்கு மற்றும் கிழக்கு மகிழ்ச்சிபுரம் எட்டையாபுரம் ரோடு பகுதியில் மழைநீர் வடிகால் கட்டும் பணி பக்கிள் ஓடை வழியாக வெளியேற்றுதல் (Disposal Point) | 8.35 |
| 16 | அசோக்நகர் பக்கிள் ஓடை முகத்துவாரம் பகுதியில் மழைநீர் வடிகால் கட்டும் பணி மற்றும் பக்கிள் ஓடையில் வெளியேற்றுதல் (Disposal Point) | 1.60 |

| | | |
|---|---|---|
| **17** | கதிர்வேல்நகர் சர்ச் மற்றும் முத்துகிருஷ்ணாநகர் பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் பம்ப் அறை கட்டும் பணி | **2.30** |
| **18** | மடத்தூர் ரோடு பகுதியில் மழைநீர் வடிகால் கட்டும் பணி மேற்கொள்ளுதல் பக்கிள் ஓடை வழியாக வெளியேற்றுதல் (Disposal Point) | **1.75** |
| **19** | மீனாட்சிபுரம் மெயின்ரோடு 1வது, 2வது தெரு, 4வது தெரு மேற்கு 3 மற்றும் 5வது தெரு குறுக்கு தெரு பகுதியில் மழைநீர் வடிகால் கட்டும் பணி | **1.35** |
| **20** | பி அண்ட் டி காலணி மெயின், பக்கிள் ஓடை அருகில் வடக்கு மற்றும் தெற்கு பகுதியில் மழைநீர் வடிகால் கட்டும் பணி | **1.50** |
| **21** | பி அண்ட் டி காலனி 1வது தெரு முதல் 16வது தெரு வரை உள்ள பகுதியில் மழைநீர் வடிகால் கட்டும் பணி மேற்கொள்ளுதல் பக்கிள் ஓடை வழியாக வெளியேற்றுதல் (Disposal Point) | **2.85** |
| **22** | பெருமாள்புரம், நியுகாலனி மெயின் ரோடு தாமோதர நகர், சிவந்தாகுளம் வடக்கு முதல் தெற்கு ரோடு மற்றும் சந்தை ரோடு விஇ ரோடு ஜார்ஜ் ரோடு பகுதிகளில் மழைநீர் வடிகால் கட்டும் பணி | **5.85** |
| **23** | ராஜுவ்நகர் வடக்கு முதல் தெற்கு மெயின் வரை உள்ள பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் பம்ப் அறை கட்டும் பணி மற்றும் ராஜுவ்நகர் 5வது தெரு, குறுக்கு தெரு 7வது தெரு முதல் கோக்கூர் வரை உள்ள பகுதிகளில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | **4.45** |
| **24** | ஆசிரியர் காலனி 1வது தெரு முதல் 10வது தெரு வரை கிழக்கு மற்றும் மேற்கு பகுதிகளில் மழைநீர் வடிகால் கட்டும் பணி | **2.10** |
| | **மொத்தம்** | **111.715** |
| | மேற்கண்ட பகுதிகளில் மழைநீர் வடிகால் கட்டும் பணியினை (TNSUDP) Phase-II பணியாக மேற்கொள்ளவும், மேற்படி பணிக்கான செலவினத்தை தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனம் சென்னை (TNUIFSL) அவர்களின் மூலம் தமிழ்நாடு நகர்ப்புற நிதி ஆதார வளர்ச்சி திட்டத்தின் (TNUSDP) கீழ் முழு மான்யமாக நிதி ஒதுக்கீடு செய்து செலவினம் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>இ1/1179/2000 (SWD TNSUDP Phase II) | |

தூத்துக்குடி மாநகராட்சி
நாள்.18.08.2020

ஆணையர் (ம) தனி அலுவலர்
தூத்துக்குடி மாநகராட்சி